# DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.154/2025**
Prosecution Witness P.W. 30

| | |
|---|---|
| Name: **திரு.கார்த்திக்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

A10 எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 13.07.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கம்பம், ஜீவானந்தம் தெருவில் குடியிருந்து வருகிறேன். பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி, விற்று வருகிறேன். 20.06.2026ம் தேதியன்று மனோஜ் பணிமனையில் வேலை செய்து வரும் கார்த்திக் என்ற நபருக்கு என்னிடமிருந்த ஸ்பெளண்டர் 2008 மாடல் இருசக்கர வாகனமான TN 58 T 4794என்ற வாகனத்தை விற்றேன். அதன்பிறகு விற்ற எனது சம்பந்தமாக கம்பம், வடக்கு போலிசார் என்னிடம் வந்து கார்த்திக் என்பவருக்கு வாகனத்தை விற்றது தொடர்பாக விசாரித்தார்கள்.

2. அவரிடம் நான் விற்றபோது விற்பனை ரசீது (Sales Receipt) கொடுத்திருந்தேன். அந்த விற்பனை ரசீதை ரூ.9,500/-க்கு கொடுத்திருந்தேன், மேற்படி விற்பனை சான்றிதழை தாக்கல் செய்கிறேன், அது அ.சா.ஆ.29. நான் அந்த வாகனத்தை அவருக்கு ரூ.10,000/-க்கு விலைபேசி ரூ.9,500/-க்கு விற்றேன்.

**எதிரிகள் A1,A2,A5,A6,A8 தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இருசக்கர வாகனத்தை வாங்கி விற்கும் தொழிலுக்கு உரிமம் பெற்று நடத்தி வருகிறேனா என்றால் உரிமம் பெற்றுள்ளேன். நான் TN 58 T

4794 என்ற வாகனத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் வேறு ஒரு வாடிக்கையாளரிடமிருந்து வாங்கினேன் அவரது பெயர் தற்போது எனக்கு நினைவில்லை. அவரிடமிருந்து நான் வாகனத்தை வாங்கியதை காட்டக்கூடிய ரசீதை போலிசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. மேற்படி வாகனத்தின் பதிவு சான்று யார் பெயரில் இருந்தது என்றால் அவரது உரிமையாளர் பெயர் இருந்தது, அவரது பெயர் நினைவில்லை. அந்த உரிமையாளரிடமிருந்து எந்த ஆண்டு வாகனத்தை வாங்கினேன் என்றால் 2025ம் ஆண்டு வாங்கினேன். நான் குறிப்பிடுவதைப் போல TN 58 T 4794 என்ற இருசக்கர வாகனத்தை நான் குறிப்பிடும் நபரிடமிருந்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. அதனால் தான் யாரிடமிருந்து மேற்படி வாகனத்தை வாங்கினேன் என்ற விபரத்தை என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.29 ரசீது போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க என்னால் உற்பத்தி செய்யப்பட்டதென்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவதைப் போல கார்த்திக் என்பவரிடம் மேற்படி வாகனத்தை விற்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**A3, 7,9,11, 12, 13, 14 ஆகிய எதிரிகள் மேற்கண்ட எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கின்றனர்.**

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.13 16:50:44 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.